Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 10/2023**

**Deposition of PW.4 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | K. ராஜா | ஜாதி | : | |
| த/பெ | : | காமாட்சி | தொழில் | : | 583 தலைமை காவலர், திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு |
| கிராமம் | : | ஜாதிக்கவுண்டன் பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.11.2017ம் தேதி சின்னாளபட்டி காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது, மதியம் 14.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் சோலைராஜா மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. திலிப் சிங் ஆகியோர்களுடன் சின்னாளபட்டி சரகத்தில் மதுவிலக்கு மற்றும் புகையிலை விற்பனை சம்பந்தமாக கண்காணித்து ரோந்து பணி சென்றபோது, சின்னாளபட்டி சொக்காபட்டி திலகம் துவக்கபள்ளி அருகில் பொன்னுச்சாமி மகன் ராஜாராம் என்பவரது பெட்டிக்கடை முன்பு மேற்படி ராஜாராம் என்பவர் புகையிலை பாக்கெட்டுகளை வைத்து சிறுவர்களுக்கு விற்பனை செய்து கொண்டிருந்தார். போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் சிறுவர்கள் ஓடிவிட்டார்கள். ராஜாராமை சுற்றி வளைத்து பிடிக்க 34 புகையிலை பாக்கெட்டுகளை விற்பனை செய்ய வைத்திருந்ததை கண்டுபிடித்தோம். புகையிலை பாக்கெட்டுகளை வைத்திருக்கவோ, விற்பனை செய்வதற்கோ எந்தவித அரசு அனுமதியும் பெறவில்லை. ஆகவே, சார்பு ஆய்வாளர் மேற்படி ராஜாராமை கைது செய்து அவர் ஆஜர்படுத்திய 34 புகையிலை பாக்கெட்டுகளை கைப்பற்றி 14.30 மணிக்கு அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், என்னுடன் வந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திலிப்சிங்கும் கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் உள்ள என்னுடைய இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம்

மட்டும் **(அ.சா.ஆ.4/PW.4)** 16.00 மணிக்கு மேற்படி எதிரியுடன் நிலையம் வந்து எதிரியின் மீது சின்னாளபட்டி காவல்நிலைய குற்ற எண். 319/2017 பிரிவு 6 r/w 24 Cigrette and tobacco Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை.**

நீங்கள், சார்பு ஆய்வாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர் எத்தனை மணிக்கு நிலையத்தில் இருந்து புறப்பட்டு, சம்பவ இடம் சென்றீர்கள் என்றால் 17.11.2017ம் தேதி மதியம் 01.00 மணிக்கு சம்பவ இடம் சென்றோம். சம்பவ இடத்திற்கும், திலகம் துவக்கபள்ளிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 300 அடி இருக்கும். சம்பவ தினத்தன்று பள்ளி வேலை நாளா என்றால் அன்று பள்ளி வேலைநாள் தான். மேற்படி பள்ளிக்கு காம்பவுண்ட் சுவர், வாட்ச் மேன் இருக்கிறார்களா என்றால் காம்பவுண்டு இருக்கிறது. மேற்படி சம்பவ நேரம் பள்ளி நேரம் என்பதால் பள்ளியில் இருந்து சிறுவர்கள் வெளியே வர வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. போலீஸ் பார்ட்டியை கண்ட எதிரி ஓடியவுடன் சுற்றி வளைத்தீர்களா, நின்ற எதிரியை சுற்றிவளைத்தீர்களா என்றால் நின்று இருந்தவரை பிடித்தோம். அத்தாட்சி சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சியில் குறிப்பு என்று காவல் நிலைய பெயர், குற்ற எண், சட்டபிரிவுகள் மட்டும் கையால் எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் குறைந்தது 1 கி.மீ தூரம் இருக்கும். பார்வைமகஜரை சார்பு ஆய்வாளர் தயார் செய்யும் போது உடன் இருந்தீர்களா என்றால் சரிதான். தனிநபர் சாட்சியாக எந்தவொரு நபரையும் அழைக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் ஏற்கனவே இருந்த புகையிலையை பயன்படுத்தி இந்த எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் புகார்தாரரும், புலன்விசாரணை அதிகாரியும் சார்பு ஆய்வாளர் தான் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor